இருக்கின்ற கோர்ட்டை வேறு இடத்திற்கு மாற்றவேண்டுமென்று சொன்னல் ஹைகோர்ட்டுடன் கலந்தாலோசித்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படும்.

திரு. க. ர. நல்லசிவம் : கோயம்புத்தூர் ஜில்லா பொதுவாக இரண்டாகப் பிரிக்கப்படக் கூடிய அளவுக்கு பெரிதாக இருக்கிறது. ஈரோட்டைப் பொறுத்தவரை ஜில்லா அளவுக்கு வேலை நடந்து வருவதன் காரணமாக கோர்ட்டுக்கு மிக அதிகமாக வேலை இருப்பதால், அங்கு ஒரு கோர்ட் ஏற்படுத்தப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு சப்–கோர்ட் ஈரோட்டில் இருக்கிறது. இப்போதுள்ள நெருக்கடி நிலைமையில் இன்னெரு சப்–கோர்ட் வேண்டா மென்பதை ஹைகோர்ட் கூட ஏற்றுக் கொண்டது.

திரு. எஸ். முருகையன் : வட ஆற்காடு ஜில்லாவில் வேலூர் நகரத்தில் மூன்று சப்-கோர்ட்டுகள் இருக்கின்றன. ஒரு சப்-கோர்ட்டை திருப்பத்தூருக்கு மாற்றவேண்டுமென்று வேண்டுகோள் அனுப்பப்பட்டிருக்கிறது. திருப்பத்தூரில் அதற்கான கட்டடங்கள் எல்லாம் இருக்கின்றன. அரசாங்கம் அதை கவனிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒன்றுக்கு மேல் ஒரு ஸ்தலத்தில் சப்-கோர்ட் இருந்தால் அதை வேறு இடத்திற்கு மாற்ற வசதி இருந்தால் அது கவனிக்கப்பட்டு வருகிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவித்த கருத்து கூட அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. ஹைகோர்ட்டைக் கலந்தாலோசித்து வேண்டுவன செய்யப்படும்.

Cement

* 322 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Works be pleased to state the measures the Government have taken to supply the required quantities of cement to Municipalities, Local Bodies and Public Institutions for their works?

THE HON. SRI V. RAMAIAH : Every quarter application is made to the Government of India for the quantity of cement required by this State and the full requirements of cement by Municipalities, Local Bodies and Public Institutions are included therein. Supply is made on the actual quantity allotted by the Government of India.

திரு. வை. சங்கரன் : ஒரு சில தொழிற்சாலையிலே எக்ஸ்பான்ஷன் ஸ்கீமாக, இண்டஸ்ட்ரியல் லேபர் காலனி போன்றவைகளைக் கட்டுவதற்கு வேண்டிய சாங்ஷன் எல்லாம் செய்யப்பட்டுவிட்டாலும்கூட, சிமிண்ட் கிடைக்காத நிலைமை இருந்து வருகிறது. உதாரணமாக மதுரை விசாலாட்சி மில்ஸ் நிர்வாகத்தினர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, பாதகம் ஏற்படாத வகையிலே சிமெண்ட் சப்ளை செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தலைவர் அவர்களே, தனியார் நடத்தக் கூடிய தொழிற்சாலைகள் விஸ்தரிப்பு வேலைகளுக்காக சிமெண்ட் பற்றாக் குறையாக இருப்பதாகக் குறைபடுகிறார். மாகாணத்தில் நடக்கக்கூடிய பெரும் தொழில்களுக்குக்கூட சிமெண்ட் பற்றாக்குறையாகத்தான் இருந்து வருகிறது. பப்ளிக் செக்டாருக்கும் இப்பொது சிமெண்ட் பற்றாக் குறையாக இருந்தபோதிலும் தனியாருக்கு வேண்டிய கோட்டாவையும் அரசாங்கம் கொடுத்துத்தான் வருகிறது.

திரு. எம். தண்டாயுதபாணி : இப்போது இருக்கும் பர்மிட் முறையைக் 'கான்சல்' செய்ய சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ? இப்போது சிமெண்ட் சாதாரண ஏழை எளியவர்களுக்குக் கிடைக்காத காரணத்தால் இப்போது இருக்கும் முறையை மாற்றியமைக்க வழி செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : இப்போது இருக்கக்கூடிய முறையின் காரணமாகத்தான் சாதாரண மக்களுக்குக் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அதை ரத்து செய்து விட்டால் சிறு கட்டிடங்கள் கட்ட வேண்டுமென்று நினைக்கிறவர்கள், இனி நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. இந்த முறைதான் நீடிக்கவேண்டும். இன்னும் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம் எல்லாம்.

* 323 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா.—

(அ) 1961–62-ல் சிமெண்டில் கலப்படம் செய்ததாக தமிழ் நாட்டில் எத்தனை பேர்கள்மீது வழக்குகள் போடப்பட்டன ?

(இ) விதிக்கப்பட்ட தண்டனையின் விவரம் என்ன ?

(உ) சிமெண்டில் கலப்படம் செய்வதைத் தடுக்க அரசாங்கம் என்ன தீவிர நடவடிக்கைகள் எடுத்துள்ளது ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(உ) சிமெண்ட் அத்தியாவசியமான பொருள் என்றும் கலப்படம் செய்வது சட்டப்படி குற்றம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

Municipal Chairman (Salem)

* 324 *Q*.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that a No-Confidence Motion has been passed against the Chairman of the Salem Municipality, and of the filing of a writ by the Chairman in the High Court of Judicature at Madras for stay; and

(*b*) if so, the orders passed by the Government to transact the business of the Salem Municipal Council?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) சேலம் நகரசபை தலைவர் ரிட் மனுவை சென்னை உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்ததால் நகரசபை அலுவல்களை செயல்படுத்த அரசினர் ஆணை தேவையில்லை. ஏனெனில், சென்னை மாவட்ட நகரசபை சட்டப்படி நகரசபை உதவித் தலைவர், நகரசபை அலுவல்களை தலைவரில்லாத சமயத்தில் செயல்படுத்த கடமைப்பட்டிருக்கிறார்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : நகரசபைத் தலைவர் அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் கேஸ் தொடர்ந்திருக்கிறபடியால் அவர் களுக்கு நகரசபைத் தலைவர் ஸ்தானம் உண்டா ? இல்லையா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : 19–2–1962-ல் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

District Development Council (Tiruchirappalli North)

* 325 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to place on the table of the House, a statement containg the resolutions received by the Government from the District Development Council, Tiruchirappalli North, for the years 1960 and 1961, together with the action taken on each?